# EASTERN UNIVERSITY, SRI LANKA
## EXTERNAL DEGREE PROGRAMME
## FACULTY OF COMMERCE & MANAGEMENT
## FIRST YEAR SECOND SEMESTER EXAMINATION IN
## BACHELOR OF BUSINESS MANAGEMENT 2019/2020 (JAN/FEB-2024)
## (PROPER /REPEAT)
## BMC 1102 INSURANCE

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. நேரம்: 2 மணித்தியாலயங்கள்

வினா 01.

01. இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் எந்த ஆண்டில் தேசிய மயமாக்கப்பட்டது?
    1) 1960 2) 1961
    3) 1962 4) 1963

02. ஆயுள் காப்புறுதியின் ஒரு முக்கிய அம்சத்தை பிரதிநிதித்துவப்படுத்துவது, பின்வருவனவற்றுள் எது?
    1) இரத்துச் செய்தல்.
    2) இடை நிறுத்தல்.
    3) பதிவு செய்தல்.
    4) இழப்பீடு வழங்குதல்.

03. ஆயுள் காப்புறுதிப் பத்திரங்கள் மீது செலுத்தப்படுகின்ற கட்டுப்பணங்கள் வழமையாக,
    1) சம அளவானதாக இருக்கும்.
    2) அதிகரித்துச் செல்லும்.
    3) குறைந்து செல்லும்.
    4) மேற்குறிப்பிட்ட எதுவுமில்லை.

04. கூட்டாண்மை வியாபார நிறுவனங்கள் ஆயுள் காப்புறுதிக் காப்பீட்டைப் பின்வருபவர்களுக்காகப் பெற்றுக் கொள்கிறது.
    1) ஊழியர்கள், பங்காளிகள், பிரதான நபர்கள்.
    2) முக்கியமான வாடிக்கையாளர்கள்.
    3) பங்குதாரர்கள்.
    4) போட்டியாளர்கள்.

05. ஒரு முகவரின் கடமை அல்லாதது எது?
    1) முதன்மையாளரின் அறிவுறுத்தல்களுக்குக் கீழ்ப்படிதல்.
    2) முதன்மையாளருக்குப் பூரண விசுவாசத்துடன் நடந்து கொள்ளுதல்.
    3) அனைவருக்கும் ஒரே வகையான காப்பீட்டை வழங்குதல்.
    4) தனிப்பட்ட முறையில் கடமைகளை நிறைவேற்றுதல்.

(மொத்தம் 5 × 2 = 10 புள்ளிகள்)

வினா 02.

01. ஆயுள் காப்புறுதி என்றால் என்ன என்பதனை விளக்குவதுடன் அது எவ்வாறு பொதுக்காப்புறுதியில் இருந்து வேறுபடுகின்றது?

(06 புள்ளிகள்)

02. இலங்கையில் இன்று நடைமுறையில் உள்ள ஆயுள் காப்புறுதியின் பல்வேறு வகைகளையும் கூறி அவற்றில் ஏதாவது மூன்றினை விளக்குக.

(08 புள்ளிகள்)

03. "ஒரு ஆயுள் காப்புறுதியானது ஒரு சமூகத்தின் தனிப்பட்ட தேவைகள் (Personal needs), வியாபாரத்தேவைகள், (Business needs) என்பனவற்றை பூர்த்தி செய்ய வேண்டும்". மேலே கூறப்பட்ட கூற்றில் நீர் விளங்கிக் கொள்வது யாது? உதாரணத்துடன் விளக்குக?

(08 புள்ளிகள்)

04. "ஒரு ஆயுள் காப்புறுதிப் பத்திரத்தில் உள்ளடக்கப்படும் அனுகூலங்கள் (Benefits) சிறப்புரிமைகள் (Privileges), நிபந்தனைகளும் விதிவிலக்குகளும் (Conditioned and Exclusions) எனும் மூன்று பிரிவுகள் உள்ளடக்கப்படும்." மேலே கூறப்பட்ட மூன்று விடையங்களையும் விபரிக்குக.

(11 புள்ளிகள்)

(மொத்தம் 33 புள்ளிகள்)

வினா 03

01. ஒரு காப்புறுதியின் அடிப்படை தத்துவத்தினை விளக்கி அவை எவ்வாறு ஆயுள் காப்புறுதியில் இருந்து ஏனைய பொதுக்காப்புறுதிகளுக்கு இருந்தும் வேறுபடுகின்றன என்பதனை உதாரணத்துடன் விளக்குக?

(09 புள்ளிகள்)

02. ஒரு காப்புறுதித் தொழிலில் ஒரு முகவரின் உரிமைகளையும் கடமைகளையும் விளக்குக.

(09 புள்ளிகள்)

03. இலங்கைக் காப்புறுதி நிறுவகத்தின் (SLII) நோக்கங்களையும் செயற்பாடுகளையும் விளக்குக.

(09 புள்ளிகள்)

04. தனிநபர் விபத்து காப்பீடு என்றால் என்ன? இதன்மூலம் வழங்கப்படும் இரண்டு காப்பீடு சந்தர்ப்பங்களை விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 33 புள்ளிகள்)

வினா 04

பின்வருவன பற்றி சிறு குறிப்பெழுதுக.

01. ஒரு ஆயுள் காப்புறுதியின் பூரண நிரந்தர இயலாமை, தற்காலிக இயலாமை.

02. இலங்கை காப்புறுதி தரகர் சங்கம் (SLIBA)

03. இரட்டைக் காப்புறுதியும் மறுகாப்புறுதியும்

(மொத்தம் 3 × 8 = 24 புள்ளிகள்)